பத்திரிக்கை செய்தி

**கட்டிட வரைபட அனுமதி வழங்க லஞ்சம் வாங்கிய பாணவேடு தோட்டம் ஊராட்சி செயலாளர் சென்னை லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது.**

சென்னை, பூந்தமல்லி, கரையான்சாவடி, பொன்னியம்மன் நகரை சேர்ந்த புகார்தாரர் தனது பெயரில் பூவிருந்தமல்லி பிடாரிதாங்கல் என்ற இடத்தில் வாங்கிய வீட்டு மனைக்கு கட்டிட வரைபட அனுமதிக்காக விண்ணப்பித்து 28.09.2022 -ம் தேதி அரசு கட்டணமாக ரூ.10,700/- க்கு வரைவோலை எடுத்து செலுத்திவிட்டார். பின்னர் 11.10.2022 -ம் தேதி பாணவேடு தோட்டம் ஊராட்சி அலுவலகம் சென்று கட்டிட வரைபட அனுமதி குறித்து திரு.E.காந்தி, ஊராட்சி செயலாளர் என்பவரை சந்தித்து கேட்டபோது அவர் ரூ.10.000/- லஞ்சமாக கேட்டுள்ளார். ஆனால் வாதி தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று தனது இயலாமையை தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து அவர் ரூ.10,000/- த்திலிருந்து ரூ.7,000/- ஆக குறைத்து ரூ.7,000/- த்தை கொடுத்தால் தான் கட்டிட அனுமதியை வழங்குவேன் என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மீண்டும் 15.10.2022 - ம் தேதி மேற்படி திரு,காந்தி வாதியை செல்பேசியில் தொடர்பு கொண்டு ரூ.7,000/- த்தை கொண்டு வந்து கொடுத்துவிட்டு பஞ்சாயத்து கட்டிட அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். வாதிக்கு பஞ்சாயத்து கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு ரூ.7,000/- லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் சென்னை லஞ்ச ஒழிப்பு துறையில் 17.10.2022 - ம் தேதி புகார் அளித்ததின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

லஞ்ச ஒழிப்பு துறையினரின் ஆலோசனையின் பேரில் வாதி இன்று 19.10.2022 -ம் தேதி 12.45 மணியளவில் மேற்படி திரு.காந்தியை, பாணவேடு தோட்டம் பஞ்சாயத்து அலுவலகத்தில் சந்தித்த போது திரு. காந்தி வாதியிடம் லஞ்ச பணத்தை தர வலியுருத்தி ரூ.7,000/- த்தை கேட்டு வாங்கிய போது சென்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை அலுவலர்களால் திரு.காந்தி கைது செய்யப்பட்டார்.

கட்டிட அனுமதிக்கான இடத்தை ஆய்வு செய்து, அதற்கான ஆவணங்களை தயாரித்து பரிந்துரை செய்தும் பஞ்சாயத்து தலைவரிடம் அனுமதி பெறுவது ஊராட்சி செயலாளரின் பணியாகும்.

## PRESS NOTE

## PANCHAYAT SECRETARY ARRESTED BY DVAC FOR DEMAND AND ACCEPTANCE BRIBE FOR PLAN APPROVAL

The complainant had applied for Building Plan Approval in his name for a house site plot located at Banavedu Thottam Panchayat Poonamallee, Chennai and also paid the Government fees for the plan approval. On 11.10.2022, when the complainant approached Tr.E.Gandhi, Panchayat Secretary and enquired about the Panchayat Building Plan Approval for his land, accused had initially demanded Rs 10,000/-as illegal gratification and reduced it to Rs 7,000/. He reiterated his earlier demand on 15.10.2022 over cell phone. The complainant who was not willing to give bribe had approached the V & AC Detachment with a written complaint.

Role of Panchayath Secretary is to visit the spot on receipt of application, prepare a draft building plan approval and place it for the signature of the Panchayath president. On approval of Panchayath Secretary he has to furnish the copy to the applicant.

In this connection case was registered and a trap was organized on 19.10.22 against the Tr.E.Gandhi, Panchayat Secretary. He who reiterated his earlier demand was caught redhanded while receiving the bribe amount Rs 7,000- from the complainant in the presence of official witness. Tr.E.Gandhi, Panchayat Secretary was arrested.